# முன்னேற்ற பாதையில் செல்ல இரட்டை இலைக்கு ஓட்டு

## வாக்காளர்களுக்கு ஜெயலலிதா வேண்டுகோள்

காஞ்சிபுரம், ஏப். 19—

தமிழகம் தொடர்ந்து முன்னேற்ற பாதையில் செல்ல இரட்டை இலைக்கு வாக்களியுங்கள் என்று முதலமைச்சர் ஜெயலலிதா கேட்டுக் கொண்டார்.

காஞ்சிபுரத்தில் நடந்த பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் 18 தொகுதிகளின் வேட்பாளர்களை அறிமுகப்படுத்தி ஜெயலலிதா பேசியதாவது:–

பொதுமக்களே, மக்களால் நான், மக்களுக்காகவே நான், என்ற தாரக மந்திரத்தை கடைபிடித்தே நான் பணியாற்றி வருகிறேன். 'உங்களால் நான், உங்களுக்காகவே நான்' என்ற அடிப்படையில் தான் எனது பொது வாழ்வு அமைந்திருக்கிறது. உங்களுக்காகவே அர்ப்பணிக்கப்பட்டது தான் என்னுடைய தவ வாழ்வு.

ஒரு தாய்க்குத் தான் தன் பிள்ளைகளுக்கு என்ன தேவை என்பது தெரியும். தேர்தல் வாக்குறுதியில், கடந்த தேர்தலின் போது சொன்ன வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றிவிட்டேன். 54 தலைப்புகளின் கீழ் சொல்லப்பட்ட நூற்றுக்கணக்கான வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றிவிட்டேன். சொல்லாத பலவற்றையும் செய்திருக்கிறேன். இவ்வளவு தான் என்று கருதிவிடாதீர்கள். உங்கள் நல்லாதரவோடு மீண்டும் உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அண்ணா தி.மு.க. அரசு அமையப்பெறுமேயானால் இன்னும் ஏராளமான பல திட்டங்களை உங்களுக்காக நிறைவேற்றுவேன்.

அம்மா உணவகங்கள், அம்மா உப்பு, அம்மா குடிநீர் இது போன்ற திட்டங்கள் எல்லாம் வரும் என்று நீங்கள் எதிர்பார்த்தீர்களா? நீங்கள் நினைத்துப் பார்த்தீர்களா? இல்லை. ஆனால், ஒவ்வொரு நாளும் என் மக்களுக்காக என்ன நன்மையைச் செய்யலாம் என்று யோசித்து, யோசித்து புதிய புதிய திட்டங்களை நான் செயல்படுத்தி வருகிறேன். அதைப் போலவே, இன்னும் வரும் காலத்திலும் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பது எனக்குத் தெரியும். பிள்ளைகளுக்கு என்ன தேவை என்பது தாய்க்குத் தெரியும். பிள்ளைகளுக்கு என்ன தேவை? அதை எப்போது வழங்க வேண்டும் என்பதும் தாய்க்குத் தான் தெரியும். அது போல், நீங்கள் கற்பனை கூட செய்து பார்க்க முடியாத இன்னும் பல திட்டங்களை உங்களுக்காக நிறைவேற்றுவேன் என்ற வாக்குறுதியை அளிக்கிறேன்.

வாக்காளப் பெருமக்களே, உண்மை எப்படி நம்பிக்கையை கொடுக்கிறதோ; உழைப்பு எப்படி வசதியைக் கொடுக்கிறதோ; திறமை எப்படி வெற்றியைக் கொடுக்கிறதோ; அது போல, எனது ஆட்சி உங்களுக்கு வசந்தத்தை கொடுத்து இருக்கிறது. இந்த வசந்தம் தொடர்ந்திட, ஏழைகள் தொடர்ந்து ஏற்றம் பெற்றிட, தமிழகம் அமைதிப் பூங்காவாய் தொடர்ந்திட, மின்வெட்டே இல்லை என்ற நிலை நிலைத்திட, பொருளாதாரம் அபரிமிதமான வளர்ச்சி அடைந்திட, தொழில்கள் தொடர்ந்து வளர்ச்சி அடைந்திட, தொழிலாளர் நலன் பெருகிட, விவசாயம் விருத்தி அடைந்திட, சேவைத் துறை மேலும் செழித்திட, தமிழகம் தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் சென்றிட, தமிழகத்தின் உரிமைகள், தொடர்ந்து நிலைநாட்டப்பட, தற்போதுள்ள நலத் திட்டங்கள் நீடித்திட, அமைதி, வளம், வளர்ச்சி என்ற பாதையில் தமிழகம் தொடர்ந்து பீடு நடை போட,

வருகின்ற 16.5.2016 அன்று நடைபெற உள்ள சட்டமன்றப் பொதுத் தேர்தலில், காஞ்சிபுரம் தொகுதி வேட்பாளர் மைதிலி திருநாவுக்கரசுக்கும்; ஸ்ரீபெரும்புதூர் தொகுதி வேட்பாளர் கே. பழனிக்கும்; பல்லாவரம் தொகுதி வேட்பாளர் சி.ஆர். சரஸ்வதிக்கும்; தாம்பரம் தொகுதி வேட்பாளர் சிட்லபாக்கம் ச. ராசேந்திரனுக்கும்; செங்கல்பட்டு தொகுதி வேட்பாளர் ஆர். கமலகண்ணனுக்கும்; திருப்போரூர் தொகுதி வேட்பாளர் எம். கோதண்டபாணிக்கும்; செய்யூர் தொகுதி வேட்பாளர் ஏ. முனுசாமிக்கும்; மதுராந்தகம் தொகுதி வேட்பாளர், இந்திய குடியரசு கட்சித் தலைவர் டாக்டர் செ.கு. தமிழரசனுக்கும்; உத்திரமேரூர் தொகுதி வேட்பாளர் வாலாஜபாத் பா. கணேசனுக்கும்; கும்மிடிபூண்டி தொகுதி வேட்பாளர் கே.எஸ். விஜயகுமாருக்கும்; பொன்னேரி தொகுதி வேட்பாளர் சிறுணியம் பி. பலராமனுக்கும்; திருத்தணி தொகுதி வேட்பாளர் பி.எம். நரசிம்மனுக்கும்; திருவள்ளூர் தொகுதி வேட்பாளர் ஏ. பாஸ்கரனுக்கும்; பூந்தமல்லி தொகுதி வேட்பாளர் டி.ஏ. ஏழுமலை க்கும்; ஆவடி தொகுதி வேட்பாளர் க. பாண்டியராஜனுக்கும்; அம்பத்தூர் தொகுதி வேட்பாள[ர்] வி.அலெக்சாண்டருக்கும்; செய்யார் தொகுதி வேட்பாளர் தூசி கே. மோகனுக்கும்; வந்தவாசி தொகுதி வேட்பாளர், வி. மேகநாதனுக்கும், எம். ஜி.ஆர். கண்ட வெற்றி சின்னமாம், இரட்டை இலை சின்னத்தி[ல்] வாக்களித்து, இவர்கள் அனைவரையும் பெருவாரியான வாக்குக[ள்] வித்தியாசத்தில் மகத்தான வெற்றி பெறச் செய்[ய] வேண்டும் என்[று] உங்கள் அனைவரையு[ம்] அன்புடன் வேண்[டி] கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஜெயலலித[ா] பேசினார்.


**பாஸ்போர்ட் காணவில்லை**

இதன் மூலம் பொது மக்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் எனது பாஸ்போர்ட் எண்.U 471316 திருச்சிராப்பள்ளி ரீஜினல் பாஸ்போர்ட் அதிகாரி அவர் களால் கடந்த அன்று வழங்கப்பட்டது. மேற்படி பாஸ்போர்ட் கடந்த 13.04.2016 அன்று நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னையில் தொலைந்து விட்டது. இதை கண்டெடுத்தவர்கள் எனது கீழ்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

A.Clement Robert Raj
S/o.V.Arockiasamy
Flat A, Sunrise Apartments,
10/24, Tank Bund Road,
Nungambakkam, Chennai-34
Mobile : 9840173311

**ஈசாப் இந்தியா லிமிடெட் ESAB**

CIN L29299TN1987PLC058738

பதிவு அலுவலகம் : எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058.

தொ.பேசி எண். 044-4228 1100,

இ-மெயில். investor.relations@esab.co.in

**அறிவிப்பு**

மார்ச் 31, 2016 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளிப்பதற்கு கம்பெனியின் இயக்குனர் குழுக் கூட்டம் மே 19, 2016 வியாழக்கிழமை அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப் -படுகிறது மற்றும் ஈவுத்தொகை இருப்பின் பரிசீலிக்கப்படும்.

இயக்குனர் குழுவின் சார்பாக
S. வெங்கடகிருஷ்ணன்
நிறுவன செயலாளர்

சென்னை
19 ஏப்ரல், 2016

**ENROLMENT NOTICE**

After 10 Days of the Publication of this notice and within Three months thereafter I, SRINIVASAN.T.S, S/O, N.V. SANKARAN Aged 42 Years Permanently residing at C,7, Anugraha Apartments No. 20, 3rd Street, Paremeswari Nagar, Adyar, Chennai 600020 intent having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Building High Court Campus, Chennai 600104.

Those who have any valid Objection may notify the same to the Bar Council within 10 days.